★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 17 ஜுல்ஹஜ் 1 இதழ்: 263
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-11-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

RECEIVED 1978-11-
PERIODICALS DIVISION
LIBRARY

## மணமாகாத ஆசிரியைகளுக்கு விசேடவசதி

(யாழ்ப்பாணம்)
கஷ்டப்படும் பிரதேசங்களில் பணிபுரியும் மணமாகாத ஆசிரியைகளுக்கு விசேடவசதிகளை அளிக்க கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.
தூர இடங்களிலுள்ள டப்படும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறும் திருமணமாகாத ஆசிரியைகளுக்கு அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலேயே தங்கியிருக்க அனுமதிப்பதென்றும் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.
[6ம் பக்கம் பார்க்க]

# “எனது அறிக்கை முரணானால் தண்டனையை ஏற்கத் தயார்!

## கட்சிமாறும் நோக்கமும் எனக்குஇல்லை” வவனியா எம். பி. அறிக்கை

(வவனியா)

“கடந்த மாதம் 24ம் திகதி பத்திரிகைகளுக்கு நான் விடுத்திருந்த அறிக்கை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்பாடுகளுக்கு முரணாக இருப்பதாக தலைமைப்பீடம் கருதினால், எனக்கு விதிக்கப்படும் தண்டனையை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றேன். கட்சிவிட்டு கட்சிமாறும் நோக்கம் எனக்கு இல்லை”

இவ்வாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பத்திரிகைகளுக்கு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

கடந்த மாதம் 30ம் திகதி, பத்திரிகையில் விளக்கம் கோரப்படுகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் எனது பெயரும் இருப்பதைக் கண்டேன்.

“கடந்த மாதம் 24ம் திகதி பத்திரிகைகளுக்கு நான் கொடுத்த அறிக்கையின் உண்மைப் பிரதியொன்றை அமைப்பு நிர்வாகச் செயலாளரின் பரிசீலனைக்கு இன்று அனுப்பி வைத்துள்ளேன்.

“தமிழனின் பாரம்பரிய எல்லைப் பிரதேசம் வவனியா தொகுதியில் பறிபோகின்றது. எனது தொகுதி மக்களின் உதவியுடன் மாத்திரம் தனித்துநின்று இதனைத் தடுத்து நிறுத்தமுடியாது. எனது முன்னைய பத்திரிகை அறிக்கை இதையே தெளிவாக வலியுறுத்துகின்றது. குறித்த அறிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்பாடுகளுக்கு முரணாக இருப்பதெனத் தலைமைபபீடம் கருதினால் எனக்கு விதிக்கப்படும் தண்டனையை நான் ஏற்கத் தயாராக இருக்கின்றேன்.

“நான் சேர்ந்துள்ள கட்சிக்கோ, இயக்கத்திற்கோ களங்கம் ஏற்படுத்துவதையோ அன்றி கட்சியைவிட்டு விலகி மாற்றுக்கட்சியில் சேர்ந்தோ, ஒத்துழைத்தோ சுயநலத்திற்காக வாழ்கின்ற பரம்பரையில் நான் பிறக்கவில்லை. எனது கடந்த பதினெட்டு ஆண்டு கால வாழ்வு இதற்கு சான்று பகரும்.

“எனது பாரம்பரிய பிரதேசத்தை இழந்தபின் எனது இலட்சியமாகிய ஈழத்தை நாம் அடைவது துர்லபம். எமது இலட்சியத்திற்கேற்ற தொண்டை இனத்திற்கு நாம் செய்யவேண்டும். இதுசெய்யத்தவறின் பொறுப்புவாய்ந்த எமது பதவியை நாம் துறக்க வேண்டும்” என்று வவனியா எம். பி. தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒற்றைவழிப் பாதையில் சைக்கிள் சவாரி:

## 27 இளைஞர்களுக்கும் அபராதம்!

[யாழ்ப்பாணம்]
ஒற்றைவழிப் பாதையால் சென்ற 27 சைக்கிள் பிரயாணிகளுக்கும் யாழ். நீதவான் டபிள்யூ. எம். வீரத்ன தலா 35 ரூபா அபராதம் விதித்தார்.
(6-ம் பக்கம் பார்க்க)

அடுத்த மாதம் முதல்

## பலாலி - திருச்சி விமானசேவை?

(யாழ்ப்பாணம்)
பலாலி-திருச்சி விமானச் சேவை, அடுத்த மாதப் பிற்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.
நீண்ட இடைவெளிக்குப் பின்னர், கொழும்பு-மாலைதீவுக்கான விமானச் சேவையை ‘ஏர் சிலோன்’ நேற்று முன்தினம் ஆரம்பித்தது.
(6-ம் பக்கம் பார்க்க)

# இனப்பாகுபாடு அரசுக்குக்கிடையாது

## கைதடியில் சமூகசேவை அமைச்சர் உரை

[யாழ்ப்பாணம்]
“யாழ்ப்பாணத்தில் சில நேரங்களில் சில பிரச்னைகள் இருந்தாலும், அரசைப் பொறுத்தவரையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாடோ, வித்தியாசமோ கிடையாது.”

யாழ்ப்பாணத்துக்கு நேற்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சமூக சேவை அமைச்சர் திரு. அசோகா கருணரத்தின கைதடி வயோதிபர் இல்லத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சருடன், பிரதி சமூக சேவை அமைச்சர் திரு. ஜே. எல். சிறிசேன, சமூக சேவை அமைச்சின் செயலாளர் திரு. எஸ். குணசேகரா, சமூக சேவை அத்தியட்சகர் திரு. என். திஸநாயக்காவும் வந்திருந்தனர்.

அமைச்சர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது: தனியார் நிறுவனங்களினால் கவனிக்கப்படும், சமூக சேவை இல்லங்களுக்கு அரசு போதிய உதவியளித்து வந்தும் அவை உதாசீனப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, உடுதுணிகளை விற்கிறார்கள். வழங்கப்படும் உணவு வகைகள் சூறையாடப்படுகின்றன. கைதடி வயோதிபர் இல்லத்தைப் பொறுத்தவகையில் இப்படியான புகார்கள் இல்லை. இங்கு எனக்குச் சமர்பித்த மகஜரிலுள்ள சிலகுறைகளை இரண்டு வாரத்தில் தீர்த்துவைப்பேன். பாலுணவு சம்பந்தமான பிரச்சனையை உடனடியாக தீர்த்துவைக்கிறேன்.

தொட்டில் தொடக்கம் சுடுகாடுவரைக்குமுள்ள தனி மனிதனது சமூகநலன்களை கவனிப்பதே சமூகசேவை இலாகாவின் கடமையாகும். பொது இடங்களில் தள்ளப்படும் மனித உள்ளங்களுக்கு ஆதரவளித்து அவர்களையும் காப்பாற்றி அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது சமூக அமைச்சு. சிறு குழந்தைகள் அநாதரவாக வீதியோரங்களில் அலைபவர்களுக்கு, நல்வாழ்வு அளித்து சமுதாயத்தின் அங்கமாக அவர்களை மாற்றி அமைக்கும் பணியிலும்சமூகசேவை இலாக தொண்டு புரிகிறது. இதில் எவருக்கும்எம்மாலான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

விழாவில் தேசிய கீதத்தை கைதடி பார்வைப் புலனிழந்த குழந்தைதான் பாடினார்கள். அவர்களும் எமக்கு இறைவன் நிச்சயமாக உதவுவான் என்றே நம்புகின்றனர். இறைவனும் அவர்கன்க்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்வார் என்றார். (கெ-க)

சமூகசேவைகள் அமைச்சில்

## பாகுபாடு இருந்தால் அறிவியுங்கள்!

(யாழ்ப்பாணம்)
“எனது அமைச்சில் எவ்வித பாகுபாடும் காட்டப்படுவதில்லை. அப்படிப் பாகுபாடு காட்டப்படுவதாக இருந்தால் அதனை என் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அமைச்சர் என்ற முறையில் அதனைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுப்பேன்.”

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்றுமாலை நடந்தமாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சமூகசேவை அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இம்மகாநாட்டில் பிரதி சமூகசேவை அமைச்சர் திரு. சிறிசேன அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ, சமூகசேவை அத்தியட்சகர் திரு. திசநாயக்கா, நல்லூர் எம். பி. திரு எம். சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ். சமூகசேவை
(6-ம் பக்கம் பார்க்க).

பென்ஸ் 911 லொறி செசி

ஜெர்மனியிலிருந்து எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
பென்ஸ் 911 லொறி செசி

எமது ஸ்தாபனத்திற்கு முன் பார்வைக்கு இன்று முதல் விடப்பட்டிருக்கிறது.

விபரங்கட்கு:-

துரை
‘ஆர். ஜி. பில்டிங்ஸ்”
66 ஸ்ரான்லிரோட் யாழ்ப்பாணம்
தொலைபேசி 7750

0726

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளிநொச்சி, புதுமுறிப்பு குளத்தின் கீழ் 14 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. ப. சேதுபதி, கணபதி ஸ்டோர்ஸ், கிளிநொச்சி. 0716

### தேவை

நல்ல நிலையில் உள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் ஒன்று உடன் தேவை. ஹோமியோபதி ரேயல் கல்லூரி, இல: 20, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். 0720

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இல. 6/15, கன்னுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பழனிமுத்து இராசகோபால் என்பவரின் மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

தத்துவ வழக்கு இல: 3400

பழனிமுத்து இராசகோபால் கைம்பெண் சின்னம்மா, இல. 6/15, கன்னுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம்10ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி.

இந்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்

**சி. இராசேந்திரன்,**
சட்டத்தரணி,
மானிப்பாய். 0707

### மருந்துகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

நீண்டகாலமாக மருந்துத் தட்டுப்பாடு நிலவி வந்த தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஏழாலை மத்திய மருந்துச்சாலை அளவெட்டி வைத்தியசாலை ஆகியவற்றிற்கு யாழ்.மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வாரம் வான் மூலம் நேரடியாக கொண்டு சென்று அத்தியாவசியமான மருந்து வகைகளை விநியோகம் செய்தனர்.

### புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு.

### வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி சங்கத்தில் 11,000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்வதற்கு இருக்கின்றது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 5/-ம், வைப்புப் பணமாக ரூபா 50/-ம் செலுத்தப்படல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 15-11-78-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் என்வலப்பின் இடது பக்க மூலையில் "கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு பதில் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

பதில்பொதுமுகாமையாளர்
0722

### கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணசபை

சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஆறு வீடுகள் கட்டுவதற்கு கேள்விகள் 15-11-78 முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். மீள் அளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-ம் வைப்புப் பணம் ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் 13-11-78 பிற்பகல் 2-00 மணி வரை என்னால் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**விசேட ஆணையாளர்,**
பட்டணசபை.
கிளிநொச்சி.

பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
1-11-78. 0721

# "தமிழரைப் பிரித்துவைக்க அரசு முயற்சிக்கிறது!"

## முப்பெருவிழாவில் 'யோகேஸ்'

(யாழ்ப்பாணம்)

"எமது நாட்டு தமிழ் இலக்கியத்துறைக்கும், தமிழ்க்கலைத் துறைக்கும், தனித்துவம் உண்டு. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் எமது நாட்டுத் தமிழ்த் திரைப்படங்கள் உருவாக்கப்பட வேண்டும். திரைப்படக்கலை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வெகுசனத் தொடர்பு கருவியாகும். இதன் மூலம் தென்னிந்தியாவில் வாழும் தமிழர் அரசியல், பொருளியல் லாபம் பெற்றதோடு மட்டுமின்றி தமது செல்வாக்கினையும் எம்மிடையே திணித்துள்ளார்கள்.'

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புணர் நிறுவனமும் ஷர்மிலா ஆட்ஸ் ஸ்தாபனமும் நடாத்திய முப்பெருவிழாவில் 'ஷர்மிலா' சஞ்சிகையின் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். வளாக விரிவுரையாளர் கலாநிதி ஆ. சண்முகதாஸ் கூறினர்.

மேற்படி விழா திரு.பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம், திரு. அ. சிவனேசச்செல்வன், டாக்டர் திரு. வி. சி. இராசரெத்தினம், யாழ். எம். பி, திரு. வெ. யோகேஸ்வரன் உரையாற்றினர்கள்.

ஷர்மிலா மாத வெளியீடும் 'இதயம் எனது காணிக்கை' என்னும் தமிழ் திரைப்படத்தின் ஆரம்பவிழாவும், 'தாசியும் தபசியும்' என்ற நாடக அரங்கேற்றமும் இடம்பெற்றன.

மேலும் திரு. சண்முகதாஸ் கூறியதாவது: 'இலங்கையின் தமிழ் இலக்கியமும், கலைகளும் தனித்துவமாக வளர வேண்டும். இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி உலகில் வேறும் பதினெட்டு நாடுகளில் தமிழர் வாழுகின்றனர். அவர்களும் தமது நாட்டுச் சூழலுக்கு ஏற்ப தமது தனித்துவத்தைப்பேணி நிலைநாட்ட வேண்டும். சிறிய தீவில் வாழ்ந்து புதியநாடுகளுக்குச் சென்று குடியேறிய ஆங்கிலேயர், தமது தனித்துவத்தை நிலைநாட்டி வருகின்றமையைத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும்" என்றார்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது;

குறுகிய காலஎல்லையில் ஈழத்துத்தமிழ் திரைப்படக்கலை வளர்ந்துள்ளது. ஆயினும் தமிழ்திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு பணம் வசூலாவதில்லை. தென் இலங்கை மக்களின் ஆதரவைப் பெறும் வகையில் தென் இலங்கை முன்னணி நடிகர் ஒருவரைப் பிரதம நடிகராகக்கொண்டு இன்று ஆரம்பிக்கப்படும் இத்தமிழ் திரைப்படம் ஒரு சிறந்த வழியை ஈழத்து தமிழ்திரைப்படத்தயாரிப்பாளர்களுக்கு காட்டியுள்ளது.

"இன்றைய அரசாங்கம் தமிழர்களை பிரித்து வைத்து செயல்படுவதற்குக் கங்கணம் கட்டிநிற்கின்றது. இன்று மலையகத்தாரையும் கிழக்கு மாகாணத்தாரையும் தனித்தனியாகப் பிரித்து வைத்துள்ளதால் தமிழ் மக்களிடையே ஒரு தெளிவற்ற குழப்பமான நிலை தோன்றியுள்ளது. இலங்கையில் எப்பகுதியில் தமிழ்மக்கள் வாழ்ந்தாலும் நாம் தமிழர் என்பதை மறந்துவிடக்கூடாது. தமது ஐக்கியத்தை ந்து விடக்கூடாது. எத்தகைய குழப்பமான நிலை உருவானாலும் நாங்கள் தமிழர் என்ற ஒற்றுமையை கைவிடாது பேண வேண்டும்."

### ராஜினமா

[யாழ்ப்பாணம்]

சைவபரிபாலன சபை பரீட்சைக் காரியதரிசி திரு. சி. சிவரத்தினம் சென்றவாரம் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

பரீட்சைப் பணத்தை சபையின் வேறு உபயோகத்துக்கு எடுப்பதாக நிர்வாகசபை தீர்மானித்ததைத் தொடர்ந்து இவர் ராஜினமா செய்ததாக தெரிகிறது. பரீட்சைப் பணத்தைப் பரீட்சைத் தேவைக்கும் பாடப்புத்தகங்களுக்குமாக மாணவர்தேவைகளுக்குச் செலவிட வேண்டுமென்பதே நடைமுறை விதியாகும். (அ)

### குடிநீர்ப் பிரச்னை தீரும் அறிகுறி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியில் பின்தங்கிய படுவான் கரையில் நிலவிவரும் குடிநீர்ப் பிரச்னை விரைவில் தீர்த்து வைக்கப்படுமெனத் தெரியவருகின்றது.

மேற்படி நீண்ட காலப் பிரச்னையை பூரணமாகத் தீர்த்துவைப்பதில் மட்டக்களப்பின் இரண்டு பாராளுமன்ற பிரதிநிதிகளும் தனித்தனியாக நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள்.

மான்தீவு மூலமாக குழாய் நீர் விநியோகத் திட்டமொன்றை வவுணதீவில் ஏற்படுத்துவதற்கென முதல்வர் திரு. செ. இராசதுரை எம். பி. மட்டக்களப்பு மாவட்டப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுதிட்டத்தில் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் வவுணதீவுப் பிரதேசத்தில் ஆழக் கிணறுகள் நிறுவும் திட்டத்திற்கு இரண்டாவது எம் பி ஜனுப் பரீத் மீராலெப்பை 45 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

கன்னன்குடா மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடத்திற்கு மேற்படி திட்டத்தின்கீழ் திரு இராஜதுரை எம் பி 25 ஆயிரம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளார். (உ)

## வீடுடைத்து ரூபா 20, 000 பொருள், பணம் கொள்ளை!

### வவனியாவில் சம்பவம்

(வவனியா)

வவனியாவில் வீடொன்று உடைக்கப்பட்டு, தங்கநகைகள், ரொக்கப்பணம் உட்பட சுமார் 20,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வவனியா கந்தசாமி வீதியில் உள்ள இவ்வீடு, கடந்த 30ந் திகதி உடைக்கப்பட்டு 12,140 ரூபா பெறுமதியான நகைகளும், 7,000 ரூபா ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக வவனியாப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

இத்துணிகரக் கொள்ளை தொடர்பாகப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் மாத்தளை அலுவிகாரை தோட்டத்தைச் சேர்ந்த வி. பி. இராசு என்பவரைத் தேடி வலைவிரித்துள்ளனர். (உ)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் சுவரொட்டிக் கண்காட்சி, யாழ். மத்திய கல்லூரி சித்திர கூடத்தில் நாளைகாலை நடைபெறும்.

இலங்கை மறைக் கல்லூரியின் ஆதரவின்கீழ் நடைபெறும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் இக்காட்சியை, வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் ஆரம்பித்துவைப்பார்.

### தொடர்ந்து றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

கொக்குவில் துப்பாக்கி சூட்டுக் கொலைச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த கார்ச்சாரதியான எஸ். பத்திநாதன் என்பவரை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் கடந்த 24-ம் திகதி ஆஜர் செய்தபோது அவரைத்தொடர்ந்து இம்மாதம் 7-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எஸ். நாகராசா ஆஜரானர்.

### கட்டிடவேலைகள் பூர்த்திபெற்றன

(பண்டத்தரிப்பு)

தொகுதிகள் தோறும் ஐந்து வீடுகள் நிறுவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் திட்டப்படி வட்டுக்கோட்டைத் தொகுதியில் பொன்னாலையில் நிறுவப்பட்டுள்ள ஐந்து வீடுகளின் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளன. இவ்வீடுகளில் குடியிருக்க விரும்புபவர்களிடமிருந்து வலி.மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் விண்ணப்பங்களைக்கோரியுள்ளார்.

வட்டுக்கோட்டைத்தொகுதியில் நிரந்தரமாக வசிக்கும் சொந்தவீடு எதுவும் இல்லாதவர்கள் அபிவிருத்தி திட்டங்களுக்காக தங்கள் வீடுகளை இழந்தவர்கள் வீதிகளை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின் போது தமது வீடுகளை இழந்தவர்கள் ஆகியோர் இவ்வீடுகளைகோரி விண்ணப்பிக்க முடியும்" என்று தெரிவிக்கப்படுகின்றது.

### நவரஸநாடகம் 400வது மேடை!

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்தில் "நவரஸமன்னன்" விஜயேந்திரனின் தனிநபர் நடிப்பான் நவரஸ நாடக நிகழ்ச்சி இன்று காலை 400வது தடவையாக மேடையேறுகிறது.

இவர் "பைலட் பிரேம்நாத்" படத்திலும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உறங்கலிருக்கை

(கொழும்பு)

உறங்கல் இருக்கைகளுள்ள பஸ்களை நீண்ட தூர சேவைகளில் ஈடுபடுத்துவதற்கான புதிய திட்டத்தை ஊவா மீராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை நடைமுறைப்படுத்த உள்ளது. [ஊ]

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் சிவசுந்தரம்

சித்தன்கேணி

காலஞ்சென்ற ஆயுள்வேத டாக்டர் சிவசுந்தரத்தின் அன்பு மனைவி சிவபாக்கியம் காலமானர். இவர் சட்டத்தரணி சிவபாக்கியநாதன், பிரபல வர்த்தகர் கனகரத்தினம், ஜெயபாலசுந்தரம், டாக்டர் சிவஞானசுந்தரம்(பதுளைஅரசினர் ஆஸ்பத்திரி), சிவபாக்கியசுந்தரம், ராஜலட்சுமி, சந்தானலட்சுமி, சிவரஞ்சிதமலர், (கொழும்பு வளாகம்) சிவயோகவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், நாகரத்தினம் (வர்த்தகர்), விஜயலட்சுமி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), விக்னேஸ்வரி, தெய்வேந்திரம் (வர்த்தகர், திருகோணமலை), ஞானேஸ்வரன், (வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் மாமியாருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 0719

ஈழநாடு
The Eelanaadu

## புகையிரதங்களுக்கு கல் வீசுதல்

ஓடும் புகையிரதங்கள் மீது கல்வீசும் பழக்கம், ஒரு தொற்றுநோய் போல் பரவிவருகிறதென்றும், கல்கமுவ புகையிரதநிலையத்திற்கும், தலாவை புகையிரத நிலையத்திற்கும் இடையில்தான் புகையிரதங்கள் மீது அடிக்கடி கல்வீசப்படுவதாகவும், அநுராதபுரத்தில் உயர்ந்த அரசாங்கப் பதவி வகிக்கும் திரு. ஹெட்டி ஆராச்சி என்பவர், போக்குவரத்து அமைச்சர் நடத்திய ஒரு மகாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

புகையிரதங்களுக்குக் கல் வீசுவதால், புகையிரதப் பிரயாணிகளே காயங்களுக்குள்ளாகிறார்கள். சில மாதங்களுக்கு முன், ஒரு புகையிரத நிலையத்திற்குச் சமீபத்தில், புகையிரதத்தின் மீது வீசப்பட்ட ஒரு கல், புகையிரதக் கண்ணுடி ஜன்னலுக்கு அருகே அமர்ந்திருந்த ஒரு சிறுவனின் கண்ணில் பட்டு, அவன் கண் பார்வையையே இழக்க நேர்ந்தது.

இப்படிப் பல சம்பவங்கள் நிகழ்ந்து, பல பிரயாணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்

புகையிரதங்களுக்குக் கல் வீசும் செயல் பகிரங்கமாகக் கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்ல, இது சமூக விரோதச் செயலாகக் கருதப்பட்டுக் கடுந்தண்டனையும் விதிக்கப்பட வேண்டும்.

புகையிரதங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தொகை அதிகரிக்கப்படுவதுடன், புகையிரதங்களின் சேவை நேரங்களில் புகையிரதப் பாதை ஓரங்களிலும் ரயில்வேப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் ரோந்துநடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமும் கல்வீசும் செயலை இல்லாமற் செய்யலாம்.

சமூக, சமயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் புகையிரதங்களுக்குக் கல்வீசும் செயலைப் பகிரங்கமாகப் பொதுவைபவங்களிலெல்லாம் கண்டிக்கவேண்டியதும் அவசியமாகும்.

ரயில்களுக்குக் கல்வீசுவதால் பிரயாணிகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றிப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் அறிவுறுத்துவது, பிள்ளைகளுக்குக் கல்வீசுவதால் ஏற்படக்கூடிய தீமையை விளக்குவதுடன் இளம் பிள்ளைகள் மூலம் தவறுன தேசவிரோதச் செயல்களில் ஈடுபடும் வயது வந்தவர்களுக்கும் உணர்வூட்டவும் வழிபிறக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## சங்க நிர்வாகிகள்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி எம். பி திரு. வீ. ஆனந்தசங்கரி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினுர்.

நிர்வாகிகள் வருமாறு:- தலைவர்- சி. இராஜேஸ்வரன், உப தலைவர்- செல்வி அ. காங்கேசம்மா, செயலாளர்- இ. சங்கையா, உப செயலாளர்- த. தனபாலசிங்கம், பொருளாளர்- எஸ். செல்வரட்ணம், உப பொருளாளர்- பொ. பத்மாவதி, ஒன்பதுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# சாதி முறையைச் சைவம் ஏற்கவில்லை

சைவத்தமிழ் இனத்தில் சாதிவேறுபாடு இடைகாலத்தே வந்து புகுந்ததேயாகும். தமிழினம் சாதி வேற்றுமை அறியாதது. ஆனுல் சங்ககாலத் தமிழகத்தில் தொழில்வழிச்சாதிகள் இருந்து வந்ததாக சங்க நூல்கள்வாயிலாக அறியக் கிடக்கின்றது. அக்காலத்தே அவற்றினிடையே உயர்வுதாழ்வு கற்பிக்கப்படவில்லை. அந்தணக்கபிலரும், அல்லாத பாணரும் இரட்டையராக வாழ்ந்தனர். மேலும் அரசகுலத்தோர் வஞ்சியில குழுமீ கற்புத்தெய்வமாம் வணிகுலத்துதித்த கண்ணகியை வணங்கி வழிபட்ட

## வெள்ளிவிருந்து-8

னர். சைவசமயாசாரியர்களுள் ஒருவரான அப்பர் சுவாமிகளும், ''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்! கோத்திரமுங் குலமுங்கொண்டென் செய்வீர்?'' எனக் கேட்கின்ருர். இதிலிருந்து அப்பர் காலத்திலேயே சாதிக்கொடுமை இருந்து வந்ததென்பது தெளிவாகின்றது.

வேதத்தில் விதிக்கம்பெற்ற நால்வருணப் பாகுபாடு ஆதியில் மனிதசமுதாயத்தின் நன்மைக்காகவே ஏற்பட்டதெனலாம். சங்க காலத்திலும் நால்வருணப்பாகுபாடு இருந்ததாக அறியக் கிடக்கின்றது. தொழில் காரணமாக தோன்றிய நால்வருணப் பாகுபாடு பழங்காலத்தமிழர்களின் நாகரிக வளர்ச்சியை குறிக்கும் சமுதாய அமைப்பாக விளங்குவதையும் காணலாம். ஆதியில் வருணங்களிடையே ஏற்றத்தாழ்வோ, இழிவுச்சிறப்போ இருந்திருக்கமுடியாது பிற்காலத்தேதான், இன்றைய இத்

தினம் பல பிரிவுகளாக உருவெடுத்து புகுந்துவிட்டதெனலாம். காந்தியடிகள் ''வருணுச்சிரமதர்மம் மனிதனை லோகாயிதநிலையிலிருந்து ஆன்மார்த்த நிலைக்கு கொண்டு செல்லும் தன்மைவாய்ந்தது'' எனக் கூறுகின்ருர். மேலும் ''பிற்காலத்தில் வருணுச்சிரமத்தின் இந்த உன்னதமான கொள்கை இழிவான நிலையை அடைந்துவிட்டது என்றும், அர்த்தமற்ற வீண் சடங்குகளும், சிலர் தங்களை உயர்வானவர்கள் என்று நினைத்துக் கொள்வதும், மற்றவர்கள் மீது இழிநிலை சுமத்தப்படுவதும் தான் வருணுச்சிரமம் என்று ஆகிவிட்டது'' எனக்கூறுவதிலிருந்து இதை அறியலாம்.

மேலும் இறைவனுல்படைக்கப்பட்டனவென்று நம்பப்பெறும் வேதங்களுக்கும் இன்று பயன்படுத்தப்படும் வேதங்களுக்கும் அடிப்படையில் வேற்றுமையுண்டு என்ற கருத்தும் நிலவிவருகின்றது. இது பற்றி காந்தியடிகள் ''வேதங்கள் உண்மையையே காட்டுகின்றன, அவற்றிற்கு எல்லையே இல்லை, வேதங்களை முற்றிலும் உணர்ந்தவர் யாவர்? இன்று வேதங்கள் என்ற பெயருடன் இருப்பவை உண்மையான வேதத்தின் அதாவது, அறிவு நூலின் கோடியில் ஒன்றுகூட இல்லை'' என கூறுவதிலிருந்தும் அறியக்காணலாம். எனவே திருமூலர் காட்டும் 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' எனும் நெறியை உலகிற்கு உணர்த்தும் தனிப்பெரும்சமயம் சைவ

மெனும் பெருவிருட்சமாகும் என்பதும் நன்கு பெறப்படும்.

### சம்பந்தர் பாடநூற்சிறப்பு

சம்பந்தப்பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகம் ஒவ்வொன்றிலும் சில வரையறைகளைக் காணலாம். ஒவ்வொருபதிகத்தின் எட்டாவது பாடலில் இராவணனைப் பற்றியும், ஒன்பதாவது பாடலில் திருமாலையும், பிரமனையும் பத்தாவதுபாடலில்சமண

பண்ணிசைக்கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

பௌத்தர்களையும் பதினுராவது பாடலில் தம்மைப்பற்றி சொல்வதும் இவர் மழக்கமாகும். இச்செய்தியை,

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைகொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன்
எடுத்து முறித்திசைபாட
அண்ணல் அவற்கருள்புரிந்த
ஆக்கப் பாடருள் செய்தார்''

''திருப்பதிகம் நிறைவித்து திருக்கடைக்காப்பு சாத்தி இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்தொழுது நின்றருள்'' எனவரும் பாடல்கள் மூலம் சேக்கிழார் செந்தமிழ் எடுத்தியம்பியிருப்பதைக் காணலாம்.

### சம்பந்தர் பதிகங்களின் மொத்தப் பண்கள்

சம்பந்தர்பதிகங்களில் முதல் திருமுறையிலுள்ள பதிகங்கள் எட்டுப்பண்களிலும், இரண்டாம் திருமுறையிலுள்ள பதிகங்கள் ஆறு பண்களிலும், மூன்ரும் திருமுறையிலுள்ள பதிகங்கள் ஒன்பது பண்களிலுமாக மொத்தம் இருபத்துமூன்று பண்களில் அடைவு செய்யப்பட்டிருக்கின்றன தற்போது கிடைக்கப்பெற்ற இருபத்துமூன்று பண்களிலும் சம்பந்தர் செந்தமிழ் வகுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (வளரும்)

# "அரசியலில் மாணவர்: தமது வாழ்வைத் தாமே அழித்துக் கொள்வதாகும்"

யாழ்ப்பாணம்)

''தமிழினத்தின்எதிர்காலம் மாணவர் கைகளில் தான் உள்ளது. மாணவர்கள் நேரடி அரசியலில் பங்குபற்றுவது அவர்கள் தங்களைத் தாமே அழித்துக் கொள்வதாகும்'' என்று தஞ்சை திராவிடர்கழக மாணவர் தலைவர் திரு. பசு. கௌதமன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பெரியார் பகுத்தறிவுக்கழகக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினுர்.

கூட்டத்திற்கு கழகத்தலைவர் ஆசிரியர் அ.பொ. செல்லையா தலைமை தாங்கினுர்.

திரு. பசு. கௌதமன் மேலும் பேசுகையில் மாணவர்கள் கழகங்களில் ஈடுபட்டுப் பொதுப்பணிகளில் ஈடுபட்டால் நாட்டில் நடைபெறும் கொள்ளை கொலை போன்ற நாசகாரச் செயல்கள் குறைந்து கொள்ளும். மாணவர்கள் அரசியலில் பழுக்காத பழங்கள் காய் கனியும் வரை காத்திருக்க வேண்டும் மாணவர்கள் அரசியல் அறிவு பெறுவதற்குப் பகுத்தறிவுப் பாசறைதான் பாதை வகுக்கும்.

தமிழகத்தில் இன்று மாணவர்கள் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களில் கட்டுண்டு காரியம் ஆற்றி வருகிருர்கள். தந்தை பெரியார் அவர்களின் கருத்தைப் பின்னியே தமிழக அரசியல் 1967 லிருந்து நடைபெற்று வருகின்றது. இன்னும் 25 ஆண்டுகளுக்கு பெரியார் கருத்துக்களே தமிழக அரசியலில் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அது போல ஈழத்திலும் மாணவர்கள் தந்தை பெரியார் கொள்கையைப் பின்பற்றுவார்களேயானுல் ஈழத்தின் எதிர்காலம் எழுச்சியுளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை என்ருர்.

கூட்டத்தில் மற்றும் திருவாளர்கள் பி. சாமிநாதன் ந. சந்திரசேகரம் ஆகியோரும் உரையாற்றினுர்கள். (உ)

# "அயரா உழைப்பினுலேயே வளம் கொழிக்கும்"

(புலோலி)

''நமது நாட்டின் அபிவிருத்தியை மேலோங்கச்செய்வதற்கு இளைஞர்களினதும் யுவதிகளினதும் அயராத உழைப்பு முக்கியமாகும். இளைஞர்களும் யுவதிகளும் தமது சக்தியைச் சிறந்த வழிகளில் பிரயோகித்தால் நிச்சயம் நாட்டை அபிவிருத்தியடையச் செய்யலாம்.''

மேற்கண்டவாறு இமையாணன் வீரகத்தி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பாடசாலையை திறந்துவைத்துப்பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் தொடர்ந்து பேசிய எம். பி கூறியதாவது:

''இளைஞர்களும், யுவதிகளும் உத்தியோக மோகங்களை விடுத்து விவசாயத்துறையிலும் கைத்தொழில்துறையிலும் ஈடுபடவேண்டும். இதற்கான சகல உதவிகளையும் வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். இளைஞர்களும் யுவதிகளும் விவசாயத்திலும், கைத்தொழிலிலும் ஈடுபடுவதனுல் தாம் கூடியவருவாயைப் பெறுவதுடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் மேம்பாடடையச் செய்யலாம்'' என்ருர். [உ]

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி வேலணை இந்து இளைஞர் மன்றமும், இந்து வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

செல்வன் ஐ விஸ்வநாதன் வேலணை கிழக்கு, செல்வி உதயராணி தம்பு வேலணை-2, செல்வி அனுஷா செல்லத்துரை வேலணை கிழக்கு.

மற்றும் ஆறுதல் பரிசுகள் பெறுபவர்கள்: செல்வி பகீரதிதேவி பொன்னையா வேலணை-2, வே. தயாபரன் வேலணை, லெட்சுமிதேவி பொன்னையா வேலணை, ச. சிவலோகநாதன் வேலணை.

கீழ்க்கண்டோர் பாராட்டுப் பெறுகின்றனர்.

ஆனந்தகௌரி அருணுசலம் வேலணை, செ. ஸ்ரீ பாஸ்கரன் வேலணை கிழக்கு, ந. கோமளாதேவி வேலணை-2, கணேசன் பாக்கியநாதன் வேலணை-2. [உ]

பணிந்துபோதல் என்பது மலையில் அருவியின் வழியாகும். கீழே இறங்கிப் பணியாதுபோவதன் மூலம் அது எல்லையற்ற அந்தச்சமுத்திரத்தைப் போயடைகிறது
—சுத்தானந்தபாரதி

# கன்பொல்லை அபிவிருத்தி: ஜி.ஏ. நேரில் ஆராய்ந்தார்

(நெல்லியடி)

கன்பொல்லைக் கிராமத்தை யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் திரு. லயனல் பெர்னுண்டோ சென்று பார்வையிட்டார். அரசாங்க அதிபருடன் உயரதிகாரிகள் சிலரும் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதுபர் திரு. ஏ. குணநாயகம் ஆகியோரும் வந்திருந்தார்கள்.

கன்பொல்லைக் கிராமத்தில் உள்ள கனுவில் குளத்தையும், விகாரைக்குரியநிலம் என்பனவற்றையும் மற்றும் கன்பொல்லைக் கிராமத்திலுள்ள வீடுகளையும் ஒவ்வொன்ருகச் சென்று அரசாங்க அதிபர் பார்வையிட்டார்.

திரு இராசலிங்கம் எம் பி ஆசிரியர் க இராஜரட்ணம் ஆகியோர் அரசாங்க அதிபருக்கு வீடுகள் பற்றியும் அங்கு குடியிருப்பவர்களின் நிலைமை பற்றி விரிவாக எடுத்துரைத்து விளக்கினுர்கள்.

வீடுகளையும் மற்றும் இடங்களையும் பார்வையிட்ட சமயம் கன்பொல்லைக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும் அரசாங்க அதிபருடன் சென்றிருந்தார்கள்.

கிராமத்தினைச் சுற்றிப் பார்வையிட்டபின் யாழ். அரசாங்க அதிபர் உரையாற்றுகையில் கூறியதாவது:

''இப்பகுதி விரைவில் அபிவிருத்தி செய்யப்படும். இக்கிராமத்தில் தபாற்கந்தோர் வீடுகள் என்பன அமைக்கப்படும். மின்சார வசதிகளும் ஏற்படுத்தப்படும். இவ்வேலைகளை இப்பகுதி மக்கள் குறிப்பாக இளைஞர்கள் சிரமதான அடிப்படையில் செய்து அரசாங்கத்திற்கு உதவவேண்டும்'' என்ருர்.

கன்பொல்லைக் கிராமம் உடுப்பிட்டி எம் பி யின் சிபாரிசின் பேரில் அரசாங்கத்தினுல் முன்மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இக்கிராமம் கல்வி பொருளாதார மற்றும் துறைகளிலும் பின்தங்கிய பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மீன்பிடிக் கருத்தரங்குகள்

(பண்டத்தரிப்பு)

கடற்றெழில் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அனுசரணையுடன் மீன்பிடி பற்றிய கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும் இம்மாதத்தில் நடாத்தவுள்ளது.

பண்டத்தரிப்பு, மயிலிட்டி, நெடுந்தீவு ஆகிய இடங்களிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்குகளில் மீன்பிடிகூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. டி. ஏ. டி. ஜெயவர்த்தன தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு. எம். கந்தையா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரி திரு சிறிஸ்கந்தராஜா மேற்கொண்டுவருகின்ருர். (உ)

# ஈரானில் எண்ணெ ஊழியர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

## விமானசேவை பாதிப்பு; 115 பேர் பலி!

டெஹ்ரான், நவ. 2

ஈரானில் வேலைநிறுத்தம் செய்த எண்ணெக்கம்பனி ஊழியர்கள் சம்பளஉயர்வு தொடர்பான கோரிக்கைகளைத் தற்காலிகமாகக் கைவிட்டு 12 நகரங்களில் அமுல்செய்யப்பட்டுள்ள இராணுவச் சட்டத்தை உடன் ரத்துச்செய்யுமாறு கோரியுள்ளனர்.

இதேவேளையில் இவ்வேலை நிறுத்தத்தினல் ஈரானிய விமான சேவைகள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளதாகவும் உள்நாட்டு விமானசேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**115 பேர் பலி!**

வேலை நிறுத்தக்காரர்களுக்கும் ஆயுதப்படையினருக்கும் ஆங்காங்கே நடைபெற்ற மோதலில் 115 பேர் பலியாகியுள்ளனர் நூற்றுக்கதிகமானேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## வர்ணம் பூசவந்து கைவரிசை காட்டினராம்

[புலோலி]

வீட்டிற்கு வர்ணம் பூசச் சென்ற வாலிபரொருவருக்கு அவ்வீட்டிலிருந்த தங்க நகைகள் மீது ஆசை வந்ததால் வீட்டுரிமையாளர் கவனயீனமாக இருந்த தருணம்பார்த்து அங்கிருந்த 5000 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிக் கொண்டு கம்பி நீட்டினர். இவ்விளைருக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் 15 மாத சிறைத் தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதித்தார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி எஸ். இராசலட்சுமி என்பவரது வீட்டில் இதனை திருடியதாக மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த செல்லப்பா தங்கவேலு என்பவர் மீது வல்வெட்டித்துறைப் பொலிசாரினல் இவ் வழக்கு தொடரப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி முறைப்பாட்டுக்காரரின் வீட்டில் வர்ணம் பூசும் வேலைசெய்து வந்ததாகவும், திடீரென வேலைக்கு வருவதை நிறுத்திக் கொண்டதனல், சந்தேகம்கொண்ட முறைப்பாட்டுக்காரர் வீட்டிலிருந்த நகைகளைப் பார்த்தபோது அங்கிருந்த நகைகள் மாயமாக மறைந்தது தெரியவந்ததாகவும் கூறப்பட்டன. வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அந்த வீட்டில் வர்ணம் பூசுவதற்குப் பொறுப்பாக இருந்த செல்லத்துரை என்பவர் பொலிசாரின் விசாரணைக் குட்படுத்தப்பட்டார். இதனையடுத்து எதிரியான தங்கவேலுவுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

விசாரணையின்போது எதிரி திருடிய நகைகளைவிற்று ஆடம்பரப் பொருட்கள் பல வாங்கி சில நாட்களாக ஆடம்பர வாழ்க்கை நடத்திவந்தாரென்பது தெரியவந்தது. ஆடம்பரப்பொருட்கள் பொலிசாரினல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கிணங்கவும் ஏற்கனவே எதிரிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை இருந்தமையாலும் எதிரிக்கு 15 மாத சிறைத்தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (உ)

# சிக்மகளூர் தொகுதியில் கல்லூரி மாணவி பொலிஸ் துப்பாக்கிக்குப்பலி

## வன்முறைகளுக்கு சந்திரசேகர் கண்டனம்

சிக்மகளூர், நவ. 2

சிக்மகளூரில் இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கல்லூரி மாணவி ஒருவர் பலியானர்.

ஜனதா கட்சி சார்பில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த செல்வி காயத்ரி என்ற 19 வயது மாணவியே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர் ஆவார்.

**மாஜிஸ்திரேட் விசாரணைக்கு உத்தரவு**

இச்சம்பவம் குறித்து மாஜிஸ்திரேட் விசாரணை நடத்துமாறு மாநில முதல்வர் திரு தேவராஜ் அர்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

**சந்திரசேகர் கண்டனம்**

நடிகை சிநேகலதாவின்மகள் திருமதி நந்தரெட்டியை பொலிசார் தாக்கிக் காயப்படுத்திய சம்பவத்தையும் கல்லூரி மாணவி துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான சம்பவத்தையும் ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் கண்டித்துள்ளார்.

குறுகியகால நன்மைக்காக வன்முறைகளில் இறங்குவதை இந்திரா காங்கிரஸ் நிறுத்த வேண்டும் என்றும் திரு. சந்திரசேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## அமெரிக்க டாலரின் மதிப்பு உயரும்?

வாஷிங்டன், நவ. 2

அமெரிக்கடாலரின் மதிப்பை உயர்த்துவதற்கான புதிய திட்டங்களை ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அறிவித்துள்ளார்.

இதை அடுத்து நியுயோர்க்கிலும் வாஷிங்டனிலும் டாலரின் மதிப்பு சற்று அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## சிக்மகளூர் தேர்தலில் ஜனதா அரசு தலையிடுகிறது

### இந்திரா காங்கிரஸ் குற்றச்சாட்டு

சிக்மகளூர், நவ. 2

சிக்மகளூர் இடைத்தேர்தலில் மத்திய அரசு கண்மூடித்தனமாகத் தலையிடுகிறது என்று இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் தலைவர்களான டாக்டர் சங்கர் தயாள் சர்மா, திரு. ஏ. ஆர் அந்தனி, ஜனப் ஜைசயத் காசிம் ஆகிய தலைவர்கள் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஜனதா கட்சி அரசின் தகவல் தொடர்பு சாதனங்களை தமது தேர்தல் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்துகிறது என்றும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். ]இ]

# ஜனதா ஆட்சியில் மக்கள் ஏமாற்றப்பட்டனர்

## சிக்மகளூரில் இந்திரா

சிக்மகளூர், நவ. 2

"இந்தியாவில் 30 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் நாடு ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்தது. ஆனல் கடந்த 19மாத ஜனதா ஆட்சியில் மக்கள் சகலதுறைகளிலும் ஏமாற்றமே அடைந்துள்ளனர்."

இவ்வாறு திருமதி இந்திரா காந்தி சிக்மகளூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கூறினர்.

எமது ஆட்சியில் அவசரகாலச் சட்டம் அமுல்செய்யப்பட்டது தவறு என நிரூபிக்க ஜனதாகட்சி அரசு முயன்று வருகிறது, கமிஷன் விசாரணைகள் மூலம் மக்களைத் திசை திருப்பலாம் என்றும் அரசு கனவு காணுகிறது இவற்றுக்கெல்லாம் சிக்மகளூர் மக்கள் தகுந்த பதில் அளிக்கத் தயாராக இருக்கிறர்கள் என்றும் திருமதி காந்தி கூறினர். (இ)

## ஜே. ஆருக்கு எதிராக கோஷமிட்டவர்

சென்னை, நவ. 2

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிராக, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், கோஷம் எழுப்பிய சென்னை இன ஒதுக்கல் தடுப்புமன்றத் தலைவர் திரு. எஸ். பவளரசு தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 26ந் திகதி மாலை சென்னை காவல் படையினரால் திரு. பவளரசு கைதுசெய்யப்பட்டார். (கெ)

## 'அவ்ரோ' குண்டுவெடிப்பு:

# சந்தேக நபருக்கு டிச. 13வரை றிமாண்ட்

]கொழும்பு]

'அவ்ரோ' விமான குண்டு வெடிப்பு சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா குலசேகரம் ராஜசிங்கம், டிசம்பர் மாதம் 13-ம் திகதிவரை மேலும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. சி. ஜி. எல். டி. அல்விஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

விசாரணைகள் இன்னும் பூர்த்தி பெறவில்லை என்றும், சந்தேக நபரை மேலும் றிமாண்டில் வைக்கும்படியும் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் டி. கே. ஹேமசந்திரா தெரிவித்ததைத் தொடர்ந்து, சந்தேகநபரை டிசம்பா மாதம் 13-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.


# வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

**'றிவர்' பிரான்ட்**

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


## கிழக்கில் இளைஞர் பேரவைக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே தீர்மானித்தபடி இம்மாதம் தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக்கூட்டங்கள் கிழக்கிலங்கையில் நடைபெறுமென்று பேரவைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 11-ந் திகதி மட்டக்களப்பு பட்டாளிபுரத்திலும் 12-ந் திகதி பட்டிருப்பிலும் பேரவையின் இரு கூட்டங்கள் நடைபெறுமென்று அவர் தெரிவித்தார் (அ)

## அறப்பணி நிலையத்திற்கு பிஞன்ஸ் கம்பனி உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- பண்ணையில் உள்ள மாணவர் அறப்பணி நிலையத்திற்கு விஜயம் செய்த பிஞன்ஸ் கொம்பனி லிமிடெட் மனேஜிங் டிரெக்டர் திரு. லலித் கொத்தலாவல அங்குள்ள அநாதை, ஏழைக் குழந்தைகளைப் பார்வையிட்டதுடன் மேற்படி நிலையத்திற்கு பல உதவிகள் அளிப்பதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி மாணவர் அறப்பணி நிலையப் பாவிப்பிற்காக நவீன ரக வானெலிப் பெட்டி ஒன்றினையும், சிறந்த தட்டச்சு இயந்திரம் ஒன்றையும், பணமும் அன்பளிப்பாக வழங்க அவர் ஏற்பாடு செய்தார்.

அறப்பணி மன்றத்தின் சிறந்த முன்மாதிரியான பணிகளால் பெரிதும் கவரப்பட்ட அவர், தொடர்ந்தும் தமது ஸ்தாபனத்தின் ஆதரவும் உதவியும் மன்றத்திற்கு உண்டென்றும் கூறினர்.

வருடா வருடம் மேற்படி மாணவர் இல்லத்திற்கு இந்த ஸ்தாபனம் நன்கொடை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. [உ]

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவகுமார்-லோறன்ஸ்
**மேல்நாட்டு மருமகள்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி.ஆர்-விஜயா
**நல்லநேரம்**

**Rio** (Jaffna) Phone: 7607
Dily 4 Shows
**Great Scout**
Family Entertainment


# இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 17-ந் திகதி

வெள்ளிக்கிழமை

(3-11-78)

**மேடம்:-** உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் வேவு பார்க்கப்படும், உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர், உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**இடபம்:-** களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமேற்படும், வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும், நல்ல நாள்.

**மிதுனம்:-** குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், தொழிலில் மந்த நிலை தென்படும், விரக்தி மனப்பான்மை தென்படும், பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

**கடகம்:-** தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம், நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**சிங்கம்:-** தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும், இடமாற்றத்திற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம், ஆதரவும் உண்டு,

**கன்னி:-** புதிய வழிகள் மூலம் பொருள் வரவிற்கிடமுண்டு, பெரியோர் ஆதரவும் தாராளம் கிடைக்கும், தொழில் துறையிலும் முன்னேற்றம் தென்படும்.

**துலாம்:** ஆடம்பரமான செலவுகளைத் தவிர்க்கவும், பூமிப்பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரும், எதிலும் அடக்கம் வேண்டும்.

**விருச்சிகம்:-** விரக்திநிலை உருவாகும், வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும், நன்கு சிந்தித்த பின்பு செயலாற்றுக.

**தனுசு:-** உங்கள் பேச்சின் மூலம் மற்றவர்களை வசிகரிப்பீர்கள், இனபந்துக்கள் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

**மகரம்:-** சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக் கூடும், உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும், உஷாராக இருக்கவும்.

**கும்பம்:-** வாழ்க்கை இன்று வசதி நிறைந்ததாக இருக்கும், அன்னை வழி ஆதரவிற்கும் இடமுண்டு, சுப நாள்.

**மீனம்:-** வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும், மதிப்புக்கிடமுண்டு.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**


**ராஜா** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
**ஏமாளிகள்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
**திருடாதே** [புதிய பிரதி]

**சாந்தி** (யாழ்ப்பாணம்)
போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
2-வது ஜனத்திரள் வாரம்
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
**அவள்** புதிய பிரதி வண்ணப்படம்

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**நிலவே நீ சாட்சி**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**எங்கள் தங்க ராஜா**

**வின்ஸர்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
ஃ செல்வம் பெர்ணண்டோ ஃ டொன்பொஸ்கோ
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
**அநுராகம்**

**மனோகரா** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
பாலாஜி - விஜயகுமாரி
நடித்த
**போலீஸ்காரன் மகள்**
(புத்தம் புதிய பிரதி)

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறான்.
தினசரி 4 காட்சிகள்
**ராணி** [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்** (ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SOPHIA LOREN in
'Scandal in Sorrento' [Colour Scope]


## கண்டியில் யாழ். பனம் கள்ளுக்கு மவுசு

(சங்கானை)

வட பகுதி பனங்கள்ளுக்கு வவனியாவிலும், கண்டியிலும் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை தொகுதி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் போத்தலில் அடைக்கப்படும் பனம் கள் 'யாழ்ரோ' எனப் பெயரிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு, விற்பனையாகிவிட்டனவாம்.

வலி-மேற்கில் சங்கானை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தன்கேணி, பண்ணாகம், சுழிபுரம், தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்படும் பனம் கள்ளு தரத்தில் சிறந்தமையாலேயே இதற்கு மவுசு ஏற்பட்டு வவனியா, கண்டி ஆகிய இடங்களில் தனியார் மதுபான விற்பனை நிலையத்தார் இதனைக் கொள்முதல் செய்ய முன்வந்துள்ளனர் என்றும் இப்பகுதி சீவல் தொழிலாளர் பெருந்தொகையான கள்ளை மேற்படி சங்கத்திற்கு வழங்கும்பட்சத்தில் தொழிற்சாலை தொடர்ந்து இயங்கி அதிக லாபத்தையீட்டுவதுடன் சீவல் தொழிலாளரும் நல்ல பயன் அடைய வாய்ப்பாகுமென்றும் சங்கத் தலைவரும் வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. மு. சுப்பிரமணியம் தெரிவித்தார். (உ)

# "குற்றத்தடுப்பில் கி. சே. ஒத்துழைப்பு இல்லையே"

## பொலிஸ் அதிகாரி கவலை

(யாழ்ப்பாணம்)

"குற்றச்செயல்களை ஒழிக்கும் விடயத்தில் கிராமசேவகர்கள் முன்னர் பொலிஸாருடன் ஒத்துழைத்தனர். அது அவர்களது கடமையுங்கூட. ஆனால் அந்நிலை இன்று மாறி, கிராமசேவகர்கள் பொலிஸாருடன் ஒத்துழைக்காது ஏனோதானோ என்ற மனப்போக்குடன் நடந்துகொள்கிறார்கள்."

இவ்வாறு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில், நேற்றுச் சுன்னாகம் பொலிஸ் பகுதிக் கிராமசேவகர்கள் கலந்துகொண்ட குற்றத்தடுப்புத் தொடர்பான மகாநாடு ஒன்றில் சிறப்புரை நிகழ்த்துகையில் சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன்னுத்துரை சுகுணேந்திரன் கவலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

"சமூகத்தில் நடக்கும் குற்றச்செயல்களைக் களையும் பொறுப்பைப் பொலிஸார் ஏற்றுள்ளனர். இப்பணியை அவர்கள் முழுமையாகச் செய்யப் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. சமூகத்தில் நிம்மதியுடன் மக்கள் வாழப் பொலிஸார் ஆற்றும் பணி, மக்களின் பரந்துபட்ட ஒத்துழைப்பினாலேயே பூரணத்துவம் பெறமுடியும்.

"இதேவேளை, பொலிஸாருக்கு முன்னர் ஒத்துழைப்பு அளித்துவந்த கிராமசேவகர்கள், இப்போது அதனை மறந்துவிட்டனரென்றே எண்ணத் தோன்றுகிறது. அந்த வகையில் கிராமசேவகர்கள் நடந்துகொள்கின்றனர். வலிந்துவந்து அவர்கள் எமக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்பதில்லை. அது, அவர்களது முக்கிய கடமைகளில் ஒன்று.

"சட்டவிரோத மதுத் தயாரிப்பு, விற்பனைகளைத் தடுப்பதிற்கூட அவர்கள் உதவுவதாக இல்லை. இந்நிலை நீங்க வேண்டும். தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து, அவர்கள் தமது பதவியின் பெயருக்குக் கௌரவமளிக்கும் வகையில் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

"பொதுமக்களுக்கு நல்லது செய்ய விரும்புவதானால் அவர்கள் தம் போக்கை மாற்ற வேண்டும்." (உ)

## இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. நல்லூர் எம், பி யும் பதில் எதிர்க்கட்சித் தலைவருமான திரு மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (அ)

## லண்டன் சென்றார்

(கரணவாய்)

நெல்லியடியைச் சேர்ந்த ஆ. ஜயேந்திரன் சிவில் என்ஜினியரிங் துறையில் உயர் கல்வி பெறும்பொருட்டு லண்டன் பயணமானார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் சிறந்த விளையாட்டு வீரருமாவர். இவர் நெல்லியடியைச் சேர்ந்த வைத்தியர் ஆறுமுகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவர்.

## தீபாவளி விளையாட்டுவிழா

(யாழ். விளையாட்டு நிருபர்)

தீபாவளி தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக அரியாலை சனசமூக நிலையம் நடாத்திய வலைப்பந்தாட்ட உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

வலைப்பந்தாட்டம் போட்டி: அரியாலை சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் அரியாலை இந்து இளைஞர்சங்க விளையாட்டுக்கழகத்தை 10—9 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

உதைபந்தாட்டம்: புளுடையமன் விளையாட்டுக்கழகத்தை அரியாலை சனசமூக நிலைய 2-ம் பிரிவு 1-0 கோல்களால் வெற்றியீட்டியது. குருநகர் சீ-நோர் விளையாட்டுக்கழகத்தை அரியாலை சனசமூக நிலைய 1-ம் பிரிவு 3-1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிகளின் போது திரு. பஸ்தியாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

பாடசாலை உதைபந்தாட்டம்

## கால்இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாம் பிரிவில் பின்வரும் கல்லூரிகள் கால் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளன.

யாழ், ஒஸ்மானியா, தெல்லிப்பழை மகாஜன, யூனியன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ். இந்து ஆகியன தகுதிபெற்றுள்ள கல்லூரிகளாகும்.

நாளை மாலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் கால் இறுதிப் போட்டியில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதுகின்றன. (இ)

## பயிற்சிவகுப்புகள்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் அமைச்சு மீனவர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றை இம் மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை நடாத்தவுள்ளது. இப்பயிற்சிவகுப்புகள் சங்கானை கலாசசார மண்டபத்தில் நடைபெறும்.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இம்மாதம் ஐந்தாம் திகதி நடத்தவிருந்த சமய பாடப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை நடைபெறும் புதிய திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

(சங்கானை)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக கடமையாற்றிய திரு பராக்கிரம இராசா சிவசூரியர் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ

# சிக்மகளூரில் கலவரத்தை அடக்க மத்திய பொலிஸ்

சிக்மகளூர் நவ, 2. சிக்மகளூரில் அடுத்த ஞாயிறன்று நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் சூடு பிடித்துள்ள வேளையில் வன்முறைச்சம்பவங்களும் அதிகரித்துள்ளன,

இத்தொகுதியில் அதிகரித்து வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட மத்திய அரசு பொலிஸ் படை ஒன்றை சிக்மகளூருக்கு அனுப்பியுள்ளது.

கர்நாடக மாநில அரசின் கோரிக்கையின் பேரிலேயே இப்பொலிஸ் சிக்மகளூருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக உள்துறை ஸ்டேட் மந்திரி திரு. ராணிக்கர் மண்டல் தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த வன்முறைகளில் 80 பேர்காயமடைந்துள்ளதாகவும் ஒருமாணவி கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## 2-வது டெஸ்டில் பாகிஸ்தான் வெற்றி

லாகூர், நவ. 2

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில், லாகூரில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், பாகிஸ்தான் எட்டு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஸ்கோர் விபரம்: இந்தியா 199, 465. பாகிஸ்தான் 535-6, 128-2.

## பாகுபாடு இருந்தால்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிவுஅத்தியட்சகர் திரு. கெங்காதரன், யாழ் மாநகரவிசேட ஆணையர்ளர் திரு. கே. சிவஞானம், மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், சமூக சேவை உதவி செய்வுதற்கும், உங்கள் ஒத்துழைப்பு தேவையென்றும் இதுசப்பந்தமாக உங்களுடன் பேச என்றும் தயாராக இருப்பதாகவிம் கூறினர்.

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், யாழ்ப்பாணத்தில் தண்ணீர் பிரச்னை முக்கிய பிரச்னையாக இருப்பதாகவும் அதனை தீர்த்துவைக்கவேண்டுமென்றும் கூறினர்.

காசநோயாளர் காங்கேசன்துறைக்கு சிகிகிச்சைக்குச் செல்லவேண்டியிருப்தாக வும், சமூகசேவை இலாகா வழங்கும். பணஉதவியை வைத்துக்கொண்டு, சிகிச்சைக்கு காங்கேசன்துறைக்குச் சொந்தச் செலவில் செல்லவேண்டியிருப்பதாகவும் கூறினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், தமது தொகுதியிலுள்ள வயோதிபர் நிலையத்தில் சிற்றூழியருக்குப் சிங்களத்தேர்ச்சி கேட்கப்படுவதாகவும் 12 வருடம் வேலை செய்த ஒரு வான் சாரதி சிங்களத் தேர்ச்சியின்மையால் வேலை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினர். (க)

## மணமாகாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகலபிராந்திய கல்வியதிபர்களுக்கும் கல்வி அமைச்சினல் அனுப்பப்பட்டுள்ளது. (இ)

## பலாலி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் விமானச்சேவை, அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படலாமென்றும், அதனைத் தொடர்ந்து பலாலி-திருச்சி விமானச் சேவை ஆரம்பமாகுமென்றும் தெரியவருகிறது.

## சங்கானை

# இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் நீதிமன்றத்தில் ஆஜர்

## 'நிரபராதிகள்' என்றனர்: விசாரணை 7வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி. ஜே. மிஸ்கின், கான்ஸ்டபிள் ஸ்ரீவன் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள தனிப்பட்ட வழக்கில் எதிரிகள் தாம் நிரபராதிகள் என நேற்று தெரிவித்ததனையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி, விசாரணையை இம்மாதம் 7ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

மேற்படி எதிரிகள் இருவரும் வடபகுதி வன்செயல்கள் சில தொடர்பாக சந்தேகநபரான அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டும், குண்டாந்தடி, துப்பாக்கிப்பிடி, கைகள் ஆகியவற்றால் தாக்கியும் காயம் விளைவித்ததாகச் சந்தேகநபர் தரப்புச் சட்டத்தரணி திரு ஆர். ஜே. செல்வரத்தினத்தால் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது தெரிந்ததே. (உ)

## 27 இளைஞர் ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மீறி ஒற்றைவழிப் பாதையால் சென்றதாக 27 சைக்கிள் பிரயாணிகளைக் கடந்த மாதம் 31 ம் தேதி யாழ். பொலிஸ், போக்குவரத்து பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா கைது செய்து, மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்திருந்தார்.

நேற்று முன்தினம் 27 பேரும், யாழ். நீதிமன்றத்தில் ஆஜரானுர்கள். இவர்கள்மீது வாகனப் போக்குவரத்துச் சட்டத்தைமீறி, ஒற்றை வழிப் பாதையால் சைக்கிளில் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சைக்கிள் பிரயாணிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தலா 35 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிசாரினல் பொறுப்பேற்கப்பட்ட சைக்கிள்களும், உரியவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

ஒற்றைவழிப் பாதையாலும், பக்கம்பக்கமாகவும் சைக்கிளில் சென்றதாக இதுவரை யாழ். பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் 140 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். [க]

## தனியார் ஆசிரமங்களுக்கும் அரசு உதவியளிக்கும்

(நெல்லியடி)

சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோக கருணரட்ண நேற்று வதிரி சிறி பரமானந்தா அனாதைகள் ஆச்சிரமத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்தார், அமைச்சருடன் சமூகசேவைகள் பிரதி அமைச்சர் திரு. ஜே. எல் சிறிசேனவும். அமைச்சர்களின் பாரியார்கள், சமூகசேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னண்டோ ஆகியோரும் வந்திருந்தனர்.

அமைச்சரையும் மற்றவர்களையும் முதலில் சுவாமி பரமானந்தாஜீ மாலைசூட்டி வரவேற்ரூர். சுவாமியைத் தொடர்ந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்களான திரு. இராசரட்ணம், திரு. த, பாலேந்திரா ஆகியோர் மாலைசூட்டினர்கள். கரவெட்டி திருஇருதயக்கல்லூரி மாணவிகளின் கோலாட்டத்துடன் அமைச்சர் அழைத்துச் செல்லப்பட்டார். ஆச்சிரமத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டிடமொன்றிற்கான அத்திவாரக்கற்களை அமைச்சரும் பிரதி அமைச்சரும் நாட்டினர்கள். அதனையடுத்து அமைச்சரும் குழுவினரும் மதியபோசனம் எடுத்துக்கொண்டார்கள்.

ஆச்சிரம மேல்மாடிக் கட்டிடத்தில் சிறப்புரையும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, ஆச்சிரமத்திற்கான தேவைகளை திரு எஸ், மாணிக்கவாசகர் அமைச்சரிடம் எடுத்து விளக்கினர், அமைச்சர் தமது உரையில்:

'அனாதைகள் மற்றும் வறுமையால் வாடுகின்றவர்களுக்கு உதவியளிக்க எமது அரசாங்கம் தயங்காது, தனியார் மூலம் நடாத்தப்படும் ஆச்சிரமங்களுக்கும் எமது அரசாங்கம் நிதியுதவி அளிக்கும், அனாதைகளும் மற்றையோரும் பாதுகாத்து பேணப்படவேண்டும் என்பது எமது அரசாங்கத்தின் கொள்கையுமாகும். இந்தவகையில் மேற்படி ஆச்சிரமத்திற்கு வேண்டிய நீர் வசதி (குழாய்), கட்டிட வசதி, நிதியுதவிகளை கொழும்பிற்குத் திரும்பியபின் உரிய அதிகாரிகளுடன் ஆலோசித்து உடன் கிடைக்கக்கூடியதாக செய்ய தீர்மானித்துள்ளேன்.

இளம் சிறுர்கள் இந்நாட்டினது எதிர்கால சந்ததியினராவர், அவர்களை சரியான முறையில் பேணி வளர்க்க வேண்டும். அத்துடன் நாட்டின் அபிவிருத்திக்கும் அவர்களை உழைக்கக்கூடியவர்களாகவும் வளர்க்கவேண்டுமென்றும், அவர்கள்மூலம் தேச சமூக ஒற்றுமையும் வளர்ச்சியடைய முடியுமென்ரூர்.

ஆங்கிலத்தில் உரையாற்றிய அமைச்சர், செல்வி உமாசிவராசசிங்கத்தின் ''தாம்பாள'' நடனத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து ரசித்தார்.

### அமைச்சருக்கு அன்பான வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகைதந்த சமூக சேவை அமைச்சர் திரு. அசோக கருணரத்தினவுக்கு பலாலி விமான நிலையத்தில் அன்பான வரவேற்டளிக்கப்பட்டது.

அமைச்சருடன் பிரதி சமூக சேவை அமைச்சர் திரு. ஜே. எல் சிறிசேன தம்பதிகள், சமூகசேவை அமைச்சின் செயலாளர், திரு. எஸ். குணசேகரா தம்பதிகளும் மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

அமைச்சரைவரவேற்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ யாழ். பொலிஸ் அதிபர் திரு. சமூகசேவை அமைச்சின் யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் திரு. கே. கெங்காதரன், ஐ. தே. க. பிரமுகர்கள், திரு. ம. அமிர்தலிங்கம், ஏ. கணேசலிங்கம், சி. தர்மரெத்தினம், சமூகசேவை உயர் அதிகாரிகள் உட்படப் பலர் மாலைசூட்டி வரவேற்றனர்.

அமைச்சர் பலாலியிலிருந்து வந்து யாழ். நாகவிகாரையில் கொட்டும்மழையிலும் அஞ்சலி செலுத்தினர். நல்லூரிலுள்ள திரு சி. தர்மரெத்தினம் இல்லத்தில் காலை உணவு அருந்தினர்.

காலை 10-00 மணிக்கு கைதடி சாந்தி நிலையத்தின் புதிய ''வார்ட்''டைத்திறந்து வைத்ததுடன் அங்கு உரையாற்றினர்.

காலை 12 மணிக்கு கைதடி செவிப்புலன் பார்வைப்புலன் இழந்த குழந்தைகளின் கல்வி நிலையத்தை பார்வையிட்டார்.

மாலை 2 மணிக்கு வதிரி பரமானந்த ஆச்சிரமம் அளவெட்டி சமூக நலன் சான்று பாடசாலைக்கும், திருநெல்வேலி அநாதை இல்லத்தையும் சென்றுபார்வையிட்டார்.

4 மணிக்கு கச்சேரியில் சமூக சேவை மாவட்ட மாநாடு ஒன்றை நடத்தினர். 6-00 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தியதுடன் வல்வெட்டித்துறையிலுள்ள ஐ. தே. க பிரமுகர் திரு. எஸ். கணேசலிங்கத்தின் இல்லத்தில் இராப்போசனம் அருந்தினர்.

இன்று காலை அனுராதபுரத்துக்கு உத்தியோக விஜயத்தை மேற்கொள்வார். (கெ)

## கொலை, கார் கடத்தல்:

# சந்தேகநபர் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் நடைபெற்ற ஒரு கொலைச்சம்பவம், பண்டத்தரிப்பில் நடைபெற்ற கார் கடத்தல் சம்பவம் ஆகியன தொடர்பாக நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர் அடையாளம் காட்டப்படவில்லை.

அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவரே இச்சந்தேகநபராவார்.

சந்தேகநபரை தொடர்ந்து இம்மாதம் 7-ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ)

# "ஜே. ஆரின் டில்லிப் பேச்சை கூட்டணி இதுவரை மறுக்கவில்லை"

(புலோலி)

"கூட்டணி எம். பி.க்கள் அரசில் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாக ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன புதுடில்லியில் கூறியுள்ளார். ஆனல் தமிழ்ஈழம் மீட்டுத்தருவோம் என்று கூறிய தமிழ்த்தலைவர்களான கூட்டணியினர் இது சம்பந்தமாக எதுவித அறிக்கையும் வெளியிடவில்லை".

துன்னலையில் திரு. ஆர். குலநாயகசிங்கம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்துகூறியதாவது!

"தமிழர்கூட்டணி எம். பிக்கள் தங்களுக்குள் வேற்றுமையை வளர்த்துவருகிறூர்கள். தங்களுக்குள்ளேயே ஒற்றுமையை வளர்க்கமுடியாத 17 தமிழர் கூட்டணி எம். பிக்களும் எவ்வாறு மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்க்க முடியும்?

கூட்டணியினர் யாழ். நகரில் தங்கள்கூட்டங்களை நடத்த முடியாமல் கொழும்பிலேயே நடாத்திவருகின்றனர். தமிழ் ஈழத்தை மீட்டுத்தருவோம் என்று கூறிய இவர்கள் இன்று ஒரு இக்கட்டான நிலைக்குத் தாளப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் இவர்களிடத்தில் கொள்கை, செயல்திட்டம் என்பன இல்லாததேயாகும். கொள்கை, செயல்திட்டம் என்பன இல்லாது பாராளுமன்றம் சென்றிருக்கும் இவர்கள் தங்களிடம் கொள்கை, செயற்திட்டம் என்பன இருப்பின் அவைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தாததேன்?

# அனுராதபுரம்முதல்பரந்தன் வரை குடியேற்றத் திட்டம்

## அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

சொந்தக் காணிகளற்ற விவசாயிகளை, தகுந்த பாதுகாப்பு வசதிகளோடு மகாவலி நீர்ப்பாசனப் பகுதிகளில் குடியேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்தின் திட்டப்படி அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் புதிய குடியேற்றத் திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம்வரை விஸ்தரிக்கப்படும். அனுராதபுரத்தில் ஆரம்பிக்கப்படும் புதிய குடியேற்றத் திட்டங்கள், வடமாகாணத்தில் பரந்தன் புறங்கியாறு வரையிலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

இப் புதிய குடியேற்றத் திட்டங்களுக்கு வேண்டிய பாதுகாப்பு வசதிகளைச் செய்வதற்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அன செனிவரத்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். பல புதிய பொலிஸ் நிலையங்கள் இக்குடியேற்றப் பகுதிகளில் திறக்கப்படவுள்ளன. (ஊ)

## மின்சாரம் தடைபடும்

(யாழ்ப்பாணம்)

முக்கிய மின்சாரத் திருத்த வேலைகள் காரணமாக இம்மாதம் 5.ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை காரைநகர்—ஊர்காவற்றுறை (சரவணை, நாரந்தனை சுருவில் உட்பட). வேலணை — புங்குடுதீவு ஆகிய பகுதிகளிவ் மின்சார வழங்கல் தடைசெய்யப்பட்டிருக்கும் என யாழ். மின்பொறியியலாளர் திரு. க. சிவதாசன் அறிவித்துள்ளார். (ஊ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889 - Registered as Newspaper in SriLanka.